311714

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1255/3 - 2002 සැප්තැම්බර් 23 වැනි සඳුදා - 2002.09.23

1255/3 ஆம் இலக்கம் - 2002 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## நானாவித அறிவித்தல்கள்

ச.வ.பீ.6/2001

### 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டம்

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, இலங்கைக் காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 78 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் கீழ் இலங்கைக் காப்புறுதிச் சபையால் ஆக்கப்பட்ட விதிகள்.

கலாநிதி தயானத் சீ ஜயசூரிய,
பணிப்பாளர் தலைமையதிபதி
இலங்கைக் காப்புறுதிச் சபை.

கொழும்பு,
2002.08.30

விதிகள்

(1) இவ்விதிகள் 2002 ஆம் ஆண்டின் காப்புறுதி முகவர் தகைமை விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) ஆளெவரும், அவர் -

(அ) பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்;

(ஆ) இலங்கைப் பிரசை ஒருவர்;

(இ) பின்வரும் ஆகக் குறைந்த தகைமை தன்மைகளைப் பெற்றவர்,-

(i) ஆகக் குறைந்தது கணிதம் அல்லது எண்கணிதத்தில் திறமைச் சித்தியுடன் பொதுக் கல்வித் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில் ஆகக் குறைந்தது ஆறுபாடங்களில் சித்தி; அல்லது

(ii) இவ்விதிகள் வலுவுக்குவரும் தேதியில் காப்புறுதி முகவர் ஒருவராக ஐந்து வருடங்களுக்குக் குறையாத அனுபவம்;

(ஈ) இலங்கைக் காப்புறுதி நிறுவகத்தால் (இ.கா.நி.) அல்லது இலங்கைக் காப்புறுதிச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் குழுமத்தினால் நடாத்தப்பட்ட முன் ஆட்சேர்ப்பு பரீட்சையில் சித்தி;

(உ) குற்றவியல் குற்றத்தீர்ப்புக்கள் அற்றவர்;

(ஊ) காப்புறுதிக் கம்பெனியொன்றினால் அல்லது தரகரால் அறிமுகப்படுத்தப்பட்டவர்; அத்துடன்

(எ) உரிமமளிக்கப்பட்ட காப்புறுதியாளர் ஒருவரால் அல்லது தரகர் ஒருவரால் சம்பளம் வழங்கப்படாத ஊழியர் ஒருவர்;

ஆக இருந்தாலன்றி, காப்புறுதி முகவர் ஒருவராகப் பதிவுசெய்யப்படுதலாகாது.

(3) காப்புறுதியாளர் மற்றும் தரகர் ஒவ்வொருவரும் காப்புறுதி முகவர்களாக அத்தகைய காப்புறுதியாளருடன் அல்லது தரகருடன் பதிவுசெய்யப்பட்டுள்ள தனியாட்களின் பதிவேடொன்றை இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் காணுதல் வேண்டும்.

## "காப்புறுதி முகவர்களின் பதிவேடு

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 78(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி பேணப்படுதற்கானது

1. காப்புறுதி கம்பெனி/காப்புறுதி தரகர்: ______

2. காப்புறுதி முகவரின் முழுப்பெயர் திரு./செல்வி/திருமதி: ______

3. பிறந்த திகதி: திகதி ☐☐ மாதம் ☐☐ ஆண்டு ☐☐☐☐

4. ஆணா/பெண்ணா: ஆண் ☐ பெண் ☐

5. தே.அ.அ.இல: ☐☐☐☐☐☐☐☐☐☐

6. நாட்டினம்: ______

7. முகவரி (வதிவிடம்): ______

8. கல்வித் தகைமைகள்: ______

9. நியமனத் திகதி: திகதி ☐☐ மாதம் ☐☐ ஆண்டு ☐☐☐☐

10. பொதுக் காப்புறுதி முகவர் ☐

நீண்ட தவணை முகவர் ☐

நீண்ட தவணை மற்றும் பொதுக் காப்புறுதி முகவர் ☐

ஒப்பந்தத்தின் முடிவுறுத்துகை இ.கா.ச.வுக்கு உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

10-108

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.